# குறுக்குவிசாரணை

| | | |
|---|---|---|
| **வழக்கு எண்** | :- | **O.S.No.42/2019** |
| **வாக்குமூலம் அளிக்கும் சான்றாளர்** | :- | **வா.சா- 01 ( PW-01 )** |
| **பெயர்** | :- | **திருநாவுக்கரசு த/பெ. தியாகராஜன்** |
| **தேதி** | :- | **14-07-2026** |

**சான்றாளருக்கு சத்தியப்பிரமாணம் செய்துவைக்கப்பட்டது.**

**01 முதல் 03 வரையிலான பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**

நான் இந்த வழக்கை எதற்காக தொடுத்துள்ளேன் என்றால் கூட்டாண்மை நிறுமத்தை கலைக்க தாக்கல்செய்துள்ளேன். வாதி தரப்பு 01-ஆம் சான்றாவணமாக தாக்கல்செய்யப்பட்டுள்ள ஆவணத்தில் கண்டுள்ள கூட்டாண்மை நிறுமம்தான் இந்த வழக்கில் சம்மந்தப்பட்டது என்றால் சரிதான். அந்த கூட்டாண்மை நிறுமம் பதிவுசெய்யப்பட்டது என்றால் சரிதான்.

Geyo Aqua Industries நிறுமத்தில் நானும் 01 முதல் 03 வரையிலான பிரதிவாதிகளும் கூட்டாளிகள் என்றால் சரிதான். அந்த நிறுமம் 2013-ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது என்றால் சரிதான். அந்த நிறுமம் தொடங்கிய நாள்முதல் நான்தான் மேலாண்மை கூட்டாளி என்றால் சரிதான். 2016-ஆம் ஆண்டு ஜூலை மாதம்முதல் நான் மேலாண்மை கூட்டாளியாக இல்லை. நான் மேலாண்மை கூட்டாளியாக செயல்பட்ட நாட்களுக்கான வரவு செலவு கணக்கு விவரங்களை இந்த வழக்கில் தாக்கல்செய்யவில்லை என்றால் சரிதான். 04-ஆம் பிரதிவாதி ஜோதிவேல் மேற்சொன்ன கூட்டாண்மை

நிறுமத்தில் கூட்டாளி இல்லை என்றால் சரிதான். நானும் பிரதிவாதிகள் நால்வரும் சேர்ந்து Kings Aqua tech என்ற நிறுமத்தை 2011-ஆம் ஆண்டு தொடங்கினோம் என்றால் சரிதான். அந்த கூட்டாண்மை நிறுமம் பதிவுச் செய்யப்படவில்லை. அந்த நிறுமம் சம்மந்தமாக தனியாக கூட்டாண்மை ஒப்பந்தம் உள்ளது. அதை நான் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை.

இந்த வழக்குச் சம்மந்தப்பட்ட முதலில் சொல்லப்பட்டக் கூட்டாண்மை நிறுமத்திற்கான ஒப்பந்தத்தில் கூட்டாண்மை சம்மந்தமாக பிரச்சனை எழுந்தால் இசைவுத் தீர்ப்பு மூலம் தீர்க்க வேண்டும் என்று வாசகம் உள்ளது என்றால் சரிதான்.

Kings Aqua tech நிறுமத்திற்கான இயந்திரங்களை நானும் 04-ஆம் பிரதிவாதியும் வாங்கினோம் என்றால் 04-ஆம் பிரதிவாதி மட்டும் வாங்கினார். இந்த நிறுமத்திற்கும் நான்தான் மேலாண்மை கூட்டாளி என்றால் இல்லை. 01-ஆம் பிரதிவாதியும் 04-ஆம் பிரதிவாதியும்தான் இருந்தனர். நான்தான் மேலாண்மை கூட்டாளி என்றும் இந்த வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. Kings Aqua tech நிறுமத்திற்கு வாங்கப்பட்ட இயந்திரங்கள் அனைத்தும் போலியானவை என்றும் அவை வாங்கப்பட்ட நாளில் இருந்து 06 மாதங்களுக்குள் பழுதாகி விட்டன என்றும் சொன்னால் சரியல்ல. அதுச் சம்மந்தமாக 01முதல் 03 வரையிலான பிரதிவாதிகள் என்னிடமும் 04-ஆம் பிரதிவாதியிடமும் கேட்டதற்கு 04-ஆம் பிரிதிவாதி Kings Aqua tech நிறுமத்தில் இருந்து விலகிவிட்டார் என்றால் அவர் விலகியது உண்மை. அவரால் மேலும் பணம் கொடுக்க முடியாததால் விலகினார். போலி உபகரணங்கள் வாங்கிய காரணத்தால்தான் அவர் விலகினார் என்றால் இல்லை. Kings Aqua tech

நிறுமம் மூடப்பட்டுவிட்டது என்றால் சரிதான். அதன் பிறகுதான் Geyo Aqua Industries நிறுமம் தொடங்கப்பட்டது என்றால் சரிதான். Geyo Aqua Industries நிறுமத்திற்கு நான் 12.50 இலட்சம் முதலீடு செய்ததாக சொல்வது பொய் என்றும் நானும் 01முதல் 03வரையிலான பிரதிவாதிகளும் தலைக்கு 10 இலட்சம் உரூபாய்தான் முதலீடு செய்தோம் என்றும் சொன்னால் சரியல்ல. Geyo Aqua Industries சம்மந்தமான கூட்டாண்மை ஒப்பந்தத்தில் ஒவ்வொரு ஆண்டும் மார்ச்மாதம் கணக்கை முடித்து ஒப்படைக்க வேண்டும் என்று நிபந்தனை உள்ளது என்றால் சரிதான். அந்த நிபந்தனைபடி நான் ஒவ்வொரு ஆண்டும் மார்ச் மாதம் கணக்கை ஒப்படைக்கவில்லை என்றால் சரியல்ல.

Geyo Aqua Industries நிறுமத்தின் வங்கிக் கணக்கை நானும் 01-ஆம் பிரதிவாதி வெங்கடேசனும் இயக்க வேண்டும் என்று உள்ளது என்றால் சரிதான். நிறுமத்திற்கு எந்த வகையில் கடன் வாங்கினாலும் நிறுமத்தின் பெயரில்தான் வாங்க வேண்டும் என்றும் அனைத்துக் கூட்டாளிகளின் இசைவும் பெறப்பட வேண்டும் என்றும் சொன்னால் சரிதான். தனிப்பட்ட முறையில் யாராவது கடன் வாங்கினால் அந்தக் கடன் நிறுமத்தையோ மற்றக் கூட்டாளிகளையோ கட்டுப்படுத்தாது என்றால் சரிதான்.

நான் சங்ககிரி நிதி நிறுவனத்தில் வாங்கிய கடனை நான் மேலாண் கூட்டாளியாக இருந்து விலகியபின் மற்றக் கூட்டாளிகள் செலுத்தித் தீர்த்தனர் எனறால் சரிதான். SBI வங்கியின் சூரமங்கலம் கிளையில் நிறுமத்திற்காக 6.50 இலட்சம் உரூபாய் கடன் வாங்கியதாகவும் அந்தக் கடனுக்காக எனது தனிப்பட்ட வங்கிக் கணக்கில் இருந்து மேற்சொன்ன வங்கி 49 ஆயிரம் உரூபாயை பிடித்துக்கொண்டதாகவும் நான் சொல்லி

யுள்ளது தவறு என்றும் அந்தப் பணத்தை மற்றக் கூட்டாளிகள் எனக்கு பணமாக கொடுத்தனர் என்றும் சொன்னால் சரியல்ல. 6.50 இலட்சம் கடனையும் நான் மேலாண்கூட்டாளியாக இருந்து விலகியபின் மற்றக் கூட்டாளிகள் அடைத்தனர் என்றும் சொன்னால் அது எனக்குத் தெரிய-வில்லை.

Geyo Aqua Industries நிறுவனத்தில் நான் மேலாண்கூட்டாளியாக இருந்த காலத்திற்கான கணக்குகளை சரியாக காட்டாமலும் தவறான கணக்குகளை வைத்திருந்ததாலும் அதை மற்றக் கூட்டாளிகள் கேட்டதால் -தான் 2016-ஆம் ஆண்டு ஜூலை மாதம்முதல் நிறுமத்திற்கே வருவதில்லை என்றால் சரியல்ல. நான் கணக்கும் கொடுத்துவிட்டேன். நிறுமத்திற்கு சென்று -வருகிறேன். நான் வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

என்னிடம் காட்டப்படும் பொது விளம்புகை பத்திர நகலில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். 01முதல் 03வரையிலான பிரதிவாதிகள் என் கையொப்பத்தை போலியாக பயன்படுத்தினார் என்று நான் பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

என் தகப்பனாரிடம் வாங்கிய கடனுக்கான அசலையும் வட்டியையும் நான் மேலாண் கூட்டாளியாக இருந்தபோது கணக்குப் பார்த்து எடுத்துக்-கொண்டேன் என்றால் சரியல்ல. நான் வழக்குரையின் பின் இணைப்பில் சொல்லியுள்ள கடன் நிலுவை சம்மந்தமான விவரங்கள் பொய்யானவை என்றால் சரியல்ல. Geyo Aqua Industries இயங்கும் இடம் வாடகை இடம் என்றால் சரிதான். வாடகை இடத்தை சொந்த இடம்போன்று வழக்குரையில் தவறாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. நிறுவனத்திற்கு என்ன வண்டி உள்ளது என்று எண் குறிப்பிட்டுச் சொல்லவில்லை என்றால் சரிதான். அந்த

விவரங்களை நான் கற்பனையாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. நான் மேலாண் கூட்டாளியாக இருந்த காலகட்டத்திற்கான முறையான கணக்கு விவரங்களை கொடுக்காமல் நான் தொடுத்துள்ள இந்த வழக்கு நிலைநிற்காது என்றால் சரியல்ல.

04-ஆம் பிரதிவாதிக்கும் Geyo Aqua Industries நிறுமத்திற்கும் சம்மந்தம் இல்லை என்பதால் அவர் சம்மந்தமான நிவாரணங்களை கேட்க எனக்கு உரிமையில்லை என்றால் சரியல்ல. எனது வழக்குத் தள்ளுபடிச் செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

Sd/-V. Pugazhenthi,
Additional District&Session Judge,
Salem.